திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் பகுதியில் இயற்கை முறையில் மூங்கில் போன்ற பொருட்களை வைத்து கை முறிவு, கால் முறிவு ஏற்பட்டவர்களுக்கு எளிய முறையில் சிகிச்சை செய்கிறார்கள். அப்படிப்பட்ட நாட்டு வைத்தியம் என்று சொல்லக்கூடிய ஒரு முறையை இந்த அரசு மருத்துவமனைகளில் அமல்படுத்த ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய மருத்துவத்துறை என்று நாம் வைத்திருக்கிறோம். அதிலே இவற்றையெல்லாம் பரீட்சார்த்தமாக செய்து பார்க்கிறோம். அந்த மருத்துவர்கள் மூங்கிலை மட்டும் வைத்துக் கட்டுவதில்லை, சில மூலிகைகளையும் வைத்துக் கட்டுகிறார்கள். அந்த மூலிகைகளைப்பற்றி மற்றவர்களுக்கு அவர்கள் சொல்லாமல் இருந்து விடுகிறார்கள், எனவே மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்த மருத்துவர்களைக் கொண்டு வந்து அதைப்பற்றி அரசுக்குத் தகவல் கொடுப்பார்களேயானால் பொதுவாக அது பயன்படும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் என்னுடைய தொகுதியைச் சார்ந்ததாகும். என்னுடைய தொகுதியின் தலைநகரமாக இருக்கின்றது. அந்தத் துறையூர் பகுதியிலே அதிகம்பேர் மருத்துவமனைக்கு வருகிறார்கள். எனவே, வரும் ஆண்டிலேயாவது இந்த மருத்துவமனையை விஸ்தரிப்பதற்குத் திட்டங்களை அதிகமாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரம் சரியாக இருக்கும்பொழுது நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோவை சிங்காநெல்லூரில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை.

236—(*வினா எண். 8411) திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சிங்காநெல்லூரில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் தனியார் நடத்துகிற மருத்துவக் கல்லூரி மாணவர்கள் நடைமுறைப் பயிற்சி பெற அனுமதிக்கப்படும் திட்டம் ஏதாவது உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் அது அமுலாக உள்ளது?

(இ) ஈ.எஸ்.ஐ. கார்ப்பொரேஷன் அதற்கு அனுமதி அளித்துள்ளதா?

1987 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ) கோவையில் உள்ள பி.எஸ்.ஜி. இன்ஸ்டிடியூட் ஆப் மெடிகல் சயின்சஸ் மாணவர்கள் கோவை ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையை பயன்படுத்திக் கொள்ள அக்கல்லூரி நிர்வாகம் அரசினை அனுமதிக் கோரியுள்ளது. அக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. சுப்பராயன் : தலைவரவர்களே, கோவை சிங்காநெல்லூரிலுள்ள ஈ.எஸ்,ஐ. மருத்துவ மனையில் பல்வேறு துறைகளுக்கு டாக்டர்கள் இல்லை; பொதுவாக டாக்டர்கள் அங்கே போதுமான அளவுக்கு இல்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது என்பதை அரசு அறியுமா? எந்த எந்தத் துறை டாக்டர்கள் இல்லாமல் இடங்கள் காலியாக இருக்கின்றனவோ அந்த அந்தத் துறைக்கு பொருத்தமான டாக்டர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, சிவில் சர்ஜன் பதவிகள் நிரப்பப்படாமல் சுமார் 60, 70 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதற்குக் காரணம் சிவில் சர்ஜன் ஒருவர் நீதிமன்றத்திற்குச் சென்று தடை ஆணை பெற்றிருக்கிறார். அந்தத் தடை ஆணை மீது விசாரணை நடைபெற்று. வழக்கு முடிந்தவுடன், தடை ஆணையின்மீது நீதிமன்றத் தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட அன்றைக்கே கூட காலியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது.

திரு. வி. பி. சிந்தன் : தலைவரவர்களே, எப்போது காலியிடங்களுக்கு மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் எதுவும் சொல்லவில்லை. மருந்துகளும் போதுமான அளவுக்கு இல்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. ஆகவே, தேவையான மருந்துகளையும் போதுமான அளவுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, எந்த மருத்துவமனையில் மருந்து இல்லை என்று சொன்னால், நிச்சயமாக மருந்து இல்லை என்று சொல்லுகின்ற டாக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். நான் இதைச் சொல்வதற்குக் காரணம் எல்லா மருத்துவமனைகளுக்கும் நிரம்ப மருந்துகள் வாங்கிக் கொடுத்திருக்கிறோம்; மருந்துகள் இல்லை என்ற பிரச்சினைக்கே இடமில்லை. கிராமத்தில் இருக்கிற கிளை மருந்தகங்களுக்குக்கூட நிரம்ப மருந்துகள் வாங்கிக் கொடுத்திருக்கிறோம்.

திரு. ஆர் ரெங்கசாமி : தலைவரவர்களே, பொதுவாக ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளிலும் டிஸ்பென்சரிகளிலும் மருந்துகள் இல்லை என்று புகார் வருகிறது. குறிப்பாக கோவில்பட்டி மருத்துவமனையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக காலியாக இருக்கின்ற டாக்டர் பதவி நிரப்பப்படவில்லை. இப்படி பல

இடங்களில் பல டாக்டர் பதவிகள் காலியாக இருக்கின்றன. எல்லா மருத்துவமனைகளிலும் போதுமான மருந்து இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் கோவில் பட்டி மருத்துவமனையில் போதுமான அளவுக்கு மருந்துகள் இல்லை; போதுமான அளவுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, எந்த மருத்துவமனையில் அல்லது மருந்தகத்தில் மருந்து இல்லை என்று சொல்லி விவரமாக எழுதிக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். எல்லா மருத்துவமனைகளிலும் மருந்துகள் குறைவற்றிருக்கின்றன என்பதை அழுத்தம் திருத்த மாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடவாசல் ஊராட்சி ஒன்றிய செருகளத்தூர் சித்த மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக உயர்த்தல்.

237—(*வினா எண் 10533) திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த செருகளத்தூர் சித்த மருத்துவ மனையை அரசு மருத்துவமனையாக உயர்த்தி, படுக்கை வசதி களை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: தலைவரவர்களே, பிரைமரி ஹெல்த் சென்டர் அல்லது அரசு மருத்துவமனை தொடங்கும் நோக்கம் நம்முடைய அரசின் பரிசீலனையில் உள்ளதா? தமிழ் நாட்டில் எத்தனை இடங்களில் தொடங்கும் திட்டம் உள்ளது என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற மூலக் கேள்வி சித்த மருத்துவமனையைப் பற்றியது. இப்போது கேட்பது ஆரம்பச் சுகாதார நிலையம் என்று கருதுகிறேன். இந்த ஆண்டு 149 ஆரம்பச் சுகாதார நிலையங்களைத் தொடங்க அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: தலைவரவர்களே, குத்தாலம் தொகுதி குடவாசல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த செருகளத்தூர் ஊரில் இருக்கிற சித்த மருத்துவமனையை, இந்த ஆண்டு கிட்டத்தட்ட 158 பிரைமரி ஹெல்த் சென்டர்களைத் தொடங்க அரசு முடிவு செய்திருப்பதைக் கருத்திற்கொண்டு,